G.C.E (O/L)

அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்களின் அடிப்படையில் இடம்பெற்ற கடந்த கால வினாக்களின் தொகுப்பு





PIRASANNA MATHS ACADEMY

1 எண்கள்



கணிதம்

2016–2021



Math it Easy With PIRASANNA



தேடலும் தருகையும்:

N.PIRASANNA

NDT(Merit), B.Ed(Hons)

Teacher –Leading National School in Colombo

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

1 எண்கள்

வினாத்தாள் 1		மொத்த புள்ளி
பகுதி A	பகுதி B	
4	2	28

ELC - 01	வர்க்கமூலம் (I A)	தரம்-10	அலகு-02
ELC - 02	கூட்டல் விருத்தி (I A)	தரம்-10	அலகு-02
ELC - 03	பின்னங்களின் பிரசினங்கள் (I B)	தரம்-10	அலகு-03
ELC - 04	நேர்மாறு விகித சமம் (I A)	தரம்-10	அலகு-10
ELC - 05	வரிவகைகள் (I A)	தரம்-10	அலகு-14
ELC - 06	எளிய வட்டி (I A)	தரம்-10	அலகு-14
ELC - 07	சுட்டிகளும் மடக்கைகளும் (I A)	தரம்-10	அலகு-19
ELC - 08	பெருக்கல் விருத்தி (I A)	தரம்-11	அலகு-16
ELC - 09	கூட்டு வட்டி (I A)	தரம்-11	அலகு-09
ELC - 10	வரையறுக்கப்பட்ட கம்பனி (I B)	தரம்-10	அலகு-03



www.ikeda.lk

1 எண்கள்

அத்தியாவசியக் கற்றல் எண்ணக்கருக்கள்
Essential Learning Concepts

PIRASANNA MATHS ACADEMY

ELC - 01 வர்க்கமூலம் (I A) தரம்-10 அலகு-02

01. அட்டவனையில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி $\sqrt{90}$ இன் முதலாம் அண்ணளவாக்கத்தைக் காண்க.

x	9.3	9.4	9.5	9.6
x^2	86.49	88.36	90.25	92.16

2016 (O/L) 11

02. கீழே தரப்பட்டுள்ள பெறுமானங்களிடையே $\sqrt{32}$ இன் முதலாம் அண்ணளவாக்கத்தைத் தெரிந்தெடுக்க.

$5.2 , 5.3 , 5.7 , 5.9$

2017 (O/L) 08

03. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றுக்கள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறியையும் பிழையான கூற்றுகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறியையும் இடுக.

$3 < \sqrt{14} < 4$	
$\sqrt{35} < 5.5$	
$\sqrt{3} + \sqrt{15} < 6$	

2021 (O/L) 17

ELC - 04 நேர்மாறு விகித சமம் (I A) தரம்-10 அலகு-10

04. ஒரு பொறியினால் ஒரு வயலில் அறுவடை செய்வதற்கு 6 மனித்தியாலங்கள் எடுக்கின்றன. அத்தகைய மூன்று பொறிகளினால் இவ்வயலில் அறுவடை செய்வதற்கு எடுக்கும் நேரம் எத்தனை மணித்தியாலங்காகும்?

2016 (O/L) 09

05. ஒரு குறித்த வேலையைச் செய்து முடிப்பதற்கு 10 மனிதர்களுக்கு 8 நாட்கள் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வேலையை 5 நாட்களில் செய்து முடிப்பதற்கு எத்தனை மனிதர்களை ஈடுபடுத்த வேண்டும்

2017 (O/L) 09

06. 10 மனிதர்கள் ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கு 6 நாட்கள் எடுப்பரென மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் இருமடங்கான வேலையைச் செய்து முடிப்பதற்கு 8 மனிதர்கள் எடுக்கும் நாட்களின் எண்ணிக்கையை காண்க?

2018 (O/L) 01

07. நான்கு மனிதர்கள் ஒரு குறித்த வேலையைச் செய்து முடிப்பதற்கு 6 நாட்கள் எடுப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் 3 நாட்களுக்கு வேலை செய்த பின்னர் மேலும் இரு மனிதர்கள் இக்குழுவுடன் சேர்ந்தால் அவ்வேலையை மேலும் எத்தனை நாட்களில் செய்து முடிக்கலாம்?.

2020 (O/L) 04

ELC - 05 வரிவகைகள் (I A) தரம்-10 அலகு-14

08. ரூ.800 பெறுமானமுள்ள ஒரு பொருளை இறக்குமதி செய்யும் போது 6% தீர்வையை செலுத்த வேண்டும். தீர்வையைக் காண்க?

2016 (O/L) 01

09. இவ்வட்டவணைக்கேற்ப ஆண்டு வருமானம் ரூ.800 000 ஐப் பெறும் ஒருவர் செலுத்த வேண்டிய வருமான வரியைக் காண்க.

ஆண்டு வருமானம்	வரிச் சதவீதம்
முதல் ரூ. 500 000	வரி விலக்கு
அடுத்த ரூ. 500 000	4%
அடுத்த ரூ. 500 000	8%

2018 (O/L) 15

10. இறக்குமதி செய்யப்பட்ட ஒரு குறித்த பொருளுக்காக 9% சுங்கத் தீர்வை இவிடப்படுகின்றது. இப்பொருளின் பெறுமானம் ரூ.6 000 எனின், சுங்கத் தீர்வையாகச் செலுத்த வேண்டிய பணத்தைக் காண்க.

2019 (O/L) 01

11. ஒரு வீட்டின் மாதாந்த தொலைபேசிப் பயன்பாட்டுக்கான கட்டணம் ரூ. 1500 ஆகும். பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக (VAT) அதனுடன் மேலும் ரூ.180 கூட்டப்படுகின்றது. இதற்கேற்ப, அறவிடப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் சதவீதத்தை காண்க.

2020 (O/L) 01

12. ஒரு பொருளை இறக்குமதி செய்கையில் அதன் இறக்குமதி பெறுமானத்தில் 22% ஆனது சுங்கத் தீர்வையாக அறவிடப்படுகின்றது. இறக்குமதிப் பெறுமானம் ரூ. 8000 ஆகவுள்ள ஒரு பொருளின் சுங்கத் தீர்வையை செலுத்திய பின்னர் பெறுமானம் யாது?

2021 (O/L) 01

ELC - 06 எளிய வட்டி (I A) தரம்-10 அலகு-14

13. ஒருவர் ரூ. 1000 ஐ 8% ஆண்டு எளிய வட்டி வீதத்தின் கீழ் ஒரு வங்கியில் வைப்புச் செய்கிறார் முதலாம் ஆண்டின் இறுதியில் இப்பணத்திற்காக அவருக்க கிடைக்கும் வட்டி யாது?

2017 (O/L) 01

ELC - 09 கூட்டு வட்டி (I A) தரம்-11 அலகு-09

14. ஒருவர் ஆண்டுதோறும் 8% கூட்டுவட்டிக்கு ரூ. 5000 ஐ இரு ஆண்டுகளாகக் கடனிற்குப் பெறுகின்றார் இக்கடனுக்காக இரண்டாம் ஆண்டிற்குரிய வட்டி யாது?

2019 (O/L) 12

15. ரூ. 6000 ஐ 5% ஆண்டு கூட்டு வட்டிக்கு 2 ஆண்டுகளுக்காக ஒரு வங்கியில் லைப்புச் செய்யும் ஒருவருக்கு முதலாம் ஆண்டுக்காக ரூ.300 வட்டி கிடைக்கின்றது. இரண்டாம் ஆண்டிற்காக அவருக்கு கிடைக்கும் வட்டி யாது?

2021 (O/L) 10

ELC - 07 சுட்டிகளும் மடக்கைகளும் (I A) தரம்-10 அலகு-19

16. சுட்டி வடிவில் காட்டுக. $log_2 16 = 4$

2016 (O/L) 04

17. மடக்கை வடிவில் எடுத்துரைக்க. $3^4 = 81$

2017 (O/L) 03

18. $26.3 = 10^{1.42}$ ஆகும் $lg\ 26.3$ இன் பெறுமானம் யாது?

2018 (O/L) 07

19. $log_2 a = 5$ எனத் தரப்பட்டிருப்பின் a இன் பெறுமானத்தை 2 இன் ஒரு வலுவாக எழுதுக.

2019 (O/L) 04

20. $log_a b = c$ எனின் பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்றின் கீழ் கோடிடுக.

$(i)\ c^a = b$ $(ii)\ a^c = b$ $(iii)\ b^c = a$ $(iv)\ c^b = a$

2020 (O/L) 01

ELC - 08 பெருக்கல் விருத்தி (I A) தரம்-11 அலகு-16

21. முதல் உறுப்பு 8 ஆகவும் பொது விகிதம் 2 ஆகவும் உள்ள பெருக்கல் விருத்தியின் 7 ஆம் உறுப்பை 2 இன் ஒரு வலுவாக எழுதுக.

2018 (O/L) 21

22. $9, 27, 81 \ldots$ என்னும் பெருக்கல் விருத்தியின் ஆறாம் உறுப்பை 3 இன் ஒரு வலுவாகக் காட்டுக.

2019 (O/L) 15

23. முதல் உறுப்பு 6 ஆகவும் இரண்டாம் உறுப்பு -12 ஆகவும் உள்ள பெருக்கல் விருத்தியின் மூன்றாம் உறுப்பைக் காண்க?

2020 (O/L) 15

24. பொது விகிதம் 5 ஆகவுள்ள ஒரு பெருக்கல் விருத்தியின் 6 ம் உறுப்பு 80 ஆகும். இவ்விருத்தியின் 8 ம் உறுப்பு யாது?

2021 (O/L) 21

ELC - 03 பின்னங்களின் பிரசினங்கள் (I B) தரம்-10 அலகு-03

01. திரு மோகன் ஒரு சனசமூக நிலையத்திற்குப் பணத்தை நன்கொடையாகக் கொடுத்தார். அவர் நன்கொடையாகக் கொடுத்த மொத்தப் பணத்தில் $\frac{2}{9}$ ஆனது இசைக் கருவிகளை வாங்குவதற்காகவும் $\frac{1}{2}$ ஆனது விளையாட்டுப் பொருள்களை வாங்குவதற்காகவும் பயன்படுத்தப்பட்டது.

i) மொத்தப் பணத்தில் என்ன பின்னம் இசைக் கருவிகளையும் விளையாட்டுப் பொருள்களையும் வாங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டதெனக் காண்க?

மீதிப் பணத்தில் $\frac{1}{5}$ ஆனது நூலகத்திற்குப் புத்தகங்களை வாங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது

ii) மொத்தப் பணத்தில் என்ன பின்னம் புத்தகங்களை வாங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டதெனக் காண்க.

புத்தகங்களை வாங்கிய பின்னர் எஞ்சிய பணம் சனசமூக நிலையத்தைப் புனுப்பிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

iii) மொத்தப் பணத்தில் என்ன பின்னம் புனுப்பிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டதெனக் காண்க?

iv) புனுப்பிப்பதற்கு செலவழிக்கப்பட்ட பணம் ரூ.20000 எனின், திரு. மோகன் நன்கொடையாகக் கொடுத்த மொத்தப் பணத்தைக் காண்க?

2016 (O/L) 01

02. ஒரு வீட்டில் உள்ள ஒரு நீர்த் தொட்டியில் நீர் முற்றாக நிரப்பப்பட்டள்ளது தொட்டியில் உள்ள நீரில் $\frac{1}{10}$ ஆனது வீட்டுத் தோட்டத்திற்கு நீரை இடுவதற்கும் $\frac{1}{4}$ அனது குளிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

i) வீட்டுத் தோட்டத்திற்கு நீரை இடுவதற்கும் குளிப்பதற்கும் தொட்டியில் உள்ள நீரில் என்ன பின்னம் பயன்படுத்தப்படுகின்றதெனக் காண்க

தொட்டியில் எஞ்சியிருக்கும் நீரில் $\frac{4}{13}$ ஆனது உடைகளை சலவை செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

ii) உடைகளை சலவை செய்வதற்கு முற்றாக நிரம்பியிருக்கும் தொட்டியில் உள்ள நீரின் என்ன பின்னம் பயன்படுத்தப்படுகின்றதெனக் காண்க

iii) இப்போது தொட்டியில் என்ன பின்னத்தில் நீர் இருக்கின்றதெனக் காண்க?

மேலும் 500 லீற்றர் நீரைச் சமையலறைத் தேவைகளுக்குப் பயன்படுத்திய பின்னர் $\frac{1}{4}$ இற்கு நீர் உள்ளது.

iv) தொட்டியின் கொள்ளளவை லீற்றரில் காண்க?

2017 (O/L) 01

03. ஒரு மனிதன் தன்னிடமுள்ள பணத்தில் $\frac{2}{5}$ ஐ மனைவிக்கும் மீதிபடபணத்தை மூன்று மகன்மாருக்குச் சமமாகவும் பிரித்து கொடுப்பதற்கு உத்தேசித்தார். எனினும் அவ்வாறு பிரிப்பதற்கு முன்பாக அவர் அப் பணத்தில் $\frac{1}{6}$ ஐச் சகோதரனுக்கு கொடுப்பதற்கு நேரிட்டது. எஞ்சியுள்ள பணம் தொடக்கத்தில் உத்தேசித்தவாறு பிரித்துக் கொடுக்கப்பட்டது.

i) மனைவிக்குக் கிடைத்த பணம் மனிதனிடம் தொடக்கத்தில் இருந்த பணத்தில் என்ன பின்னமாகும்

ii) சகோதரனுக்கும் மனைவிக்கும்கொடுத்த பின்னர் அவளிடம் உள்ள மீதிப் பணம் தொடக்கத்தில் இரந்த பணத்தில் என்ன பின்னமாகும்?

iii) ஒரு மகனுக்கு கிடைத்த பணம் முன்னர் கிடைப்பதற்கு இருந்த பணத்திலும் பார்க்க ரூ. 40000 இனாற் குறைவாகும். மனிதனிடம் தொடக்கத்தில் இருந்த பணத்தைக் காண்க?

2018 (O/L) 01

04. ஒரு கானின் மொத்த நீளத்தில் $\frac{7}{15}$ ஆனது முதலாம் நாளில் வெட்டப்பட்ட அதே வேளை எஞ்சிய நீளத்தில் $\frac{1}{4}$ ஆனது இரண்டாம் நாளில் வெட்டப்பட்டது.

i) முதலாம் நாளின் இறுதியில் கானின் மொத்த நீளத்தில் என்ன பின்னம் மேலும் வெட்டுவதற்கு எஞ்சியிருக்கும்?

ii) இரண்டாம் நாளில் கானின் மொத்த நீளத்தில் என்ன பின்னம் வெட்டப்பட்டது?

iii) கானின் மொத்த நீளத்தில் மேலும் 600 மீற்றர் நிளம் முதல் இரு நாட்களின் இறுதியில் வெட்டுவதற்கு எஞ்சியிருந்தது. கானின் மொத்த நீளத்தைக் காண்க.

iv) கானின் எஞ்சியுள்ள 600 மீற்றரை வெட்டுவதற்கு 4 மனிதர்களுக்கு 3 நாட்கள் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. அந்நீளத்தை இரண்டு நாட்களில் வெட்டுவதற்கு மேலும் எத்தனை மனிதர்களை ஈடுபடுத்த வேண்டும்?

2019 (O/L) 01

05. ஐந்து லீற்றர் கொள்ளளவு உள்ள ஒரு பாத்திரத்தில் ஒருவகை இனிப்பு பானம் நிரப்பப்பட்டிருந்தது. ஆனால் $\frac{3}{10}$ ஆனது உபசரிப்புக்காகப் பயன்படுத்தப்பட்டதுஃ

i) உபசரிப்பக்காக ஒரு பகுதியைப் பயன்படுத்தி பின்னர் எஞ்சியிருந்த இனிப்பு பானத்தின் அளவானது பாத்திரத்தின் அளவானது பாத்திரத்தின் கொள்ளளவின் என்ன பின்னமாகும்?

ii) பாத்திரத்தில் எஞ்சியிருந்த இனிப்பு பானத்தின் $\frac{5}{7}$ ஆனது ஒரு போத்தலுக்குள்ளே இடப்பட்டது. அதன் பின்னர் பாத்திரத்தில் எஞ்சியிருந்த இனிப்பு பானத்தின் அளவானது பாத்திரத்தின் அளவானது பாத்திரத்தின் கொள்ளளவின் என்ன பின்னமாகும்?

iii) இப்போது அப்பாத்திரத்தில் உள்ள இனிப்பு பானத்தின் அளவானது பாத்திரத்தின் கொள்ளளவின் செப்பமாக அரைவாசியாக இருக்கும் வரைக்கும் பாத்திரத்தில் மேலும் இனிப்பு பானம் இடப்படுகின்றது அவ்வாறு பாத்திரத்தில் இடப்படும் மேலதிக இனிப்புப் பானத்தின் அளவை லீற்றரில் தருக?

2020 (O/L) 01

06. ஒரு குறித்த கம்பனியினால் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு வகைப் பொருள்களின் ஓர் இருப்பிலிருந்து $\frac{2}{5}$ ஆனவை வர்த்தக நிலையங்களுக்கும் $\frac{3}{8}$ ஆனவை ஏற்றுமதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

i) வர்த்தக நிலையங்களுக்கும் ஏற்றுமதிக்கும் ஒதுக்கப்பட்ட அளவானது மொத்த இருப்பின் என்ன பின்னமாகும்?

ii) எஞ்சியிருக்கும் ஒப்பனைப் கொருள்களின் அளவில் $\frac{1}{3}$ ஆனவை அக்கம்பனியில் விற்பதற்கு வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு விற்பதற்கு வைக்கப்பட்டுள்ள ஒப்பனைப் பொருள்களின் அளவின் பெறுமானம் ரூ. 6000 எனின், ஒப்பனைப் பொருள்களின் மொத்த இருப்பின் பெறுமானம் யாது?

b) மேற்குறித்த ஒப்பனைப் பொருள்களின் இருப்பை உற்பத்தி செய்வதற்கு 12 தொழிலாளர்கள் 7 நாட்கள் எடுப்பரென மதிப்பிடப்பட்டுள்ளது.ஓர் அவசர கட்டளை காரணமாக இவ்விருப்பினை இரு மடங்கை 8 நாட்களில் உற்பத்தி செய்ய வேண்டியிருப்பின், அதற்காக இத்தகைய எத்தனை மேலதிகத் தொழிலாளர்களை ஈடுபடுத்தல் வேண்டும்?

2021(O/L) 01

07. *a*) மின் பொருள்களை இறக்குமதி செய்கையில் 30% தீர்வை அறவிடப்படுகின்றது. இவ்வகைப் பொருள் ஒன்றை இறக்குமதி செய்கையில் தீர்வையாக ரூ. 9000 ஐச் செலுத்த வேண்டுமெனின், இறக்குமதி செய்யும் பொருள்களின் பெறுமானம் யாது?

b) *i*) ஒரு வீட்டின் ஆண்டுப் மதிப்பீட்டுப் பெறுமானம் ரூ. 30 000 ஆகும். அந்த ஆதனத்திற்கு நகரசபை 8% ஆண்டு இறைவரியை அறவிடுமெனின், ஒரு காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய இறைவரியைக் காண்க.

ii) சில ஆண்டுகளுக்குப் பின்னர் வீட்டின் மதிப்பீட்டுப் பெறுமானம் மாறியது. அத்துடன் நகரசபை அறவிடும் இறைவரிச் சதவீதமும் 9% வரை அதிகரித்தது. அப்போது ஒரு காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய இறைவரி ரூ. 30 இனால் அதிகரித்ததெனின், வீட்டின் புதிய ஆண்டு மதிப்பீட்டுப் பெறுமானத்தைக் காண்க

2018 (O/L) 03

08. குமார் நகர சபை எல்லைகளினுள்ளே ஒரு வியாபாரத்தை நடத்துகின்றார்.

a) அவருடைய வியாபார நிலையத்தின் ஆண்டு மதிப்பீட்டுப் பெறுமானம் ரூ. 40 000 ஆகும். அந்நகர சபை 22% ஆண்டு இறை வரியை அறவிடுகின்றது.

i) ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய இறை வரியைக் காண்க.

ii) அவர் காலாண்டிற்கு இறை வரியாக எவ்வளவு பணத்தைச் செலுத்த வேண்டும்?

b)

ஆண்டு வருமானம் (ரூபா)		வரிச் சதவீதம்
முதல்	500 000	வரி விலக்கு
அடுத்த	500 000	4%
அடுத்த	500 000	8%

மேற்குறித்த அட்டவணைகளுக்கேற்பக் குமார் ஓர் ஆண்டிற்காக ரூ. 12 000 ஐ வருமான வரியாகச் செலுத்துகிறார். அவருடைய ஆண்டு வருமானம் யாது?

2019 (O/L) 03

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

ELC - 05 வரிவகைகள் (I B) தரம்-10 அலகு-03

09.

ஒரு குறித்த நகர சபை வீடுகளுக்காக அவற்றின் ஆண்டு மதிப்பீட்டுப் பெறுமானத்தின் 12% ஐ இறை வரியாக ஆண்டுதோறும் அறவிடுகின்றது

i) கமலனின் வீட்டின் ஆண்டு மதிப்பீட்டுப் பெறுமானம் ரூ. 15 000 ஆகும். அவர் செலுத்த வேண்டிய ஆண்டு இறை வரி யாது?

ii) கமலன் தனது வீட்டினை மாத வாடகை ரூ. 9000 வீதம் ஓர் ஆண்டிற்கு வாடகைக்காகக் கொடுத்து முழு வாடகையையும் ஒரே தடவையில் பெறுகின்றார். அல் வீட்டின் ஓராண்டுக்கான இறை வரியைச் செலுத்துவதோடு வீட்டின் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ. 8200 ஐயும் செலவிடுகின்றார். அதன் பின்னர் கமலனிடம் எஞ்சியிருக்கும் பணத்தைக் காண்க.

iii) கமலன் எஞ்சியிருக்கும் பணத்தை ஒரு பங்கின் விலை ரூ. 40 ஆகவுள்ள ஒரு கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு முதலீடு செய்கின்றார் ஓர் ஆண்டின் இறுதியில் அவருக்கு ரூ. 7350 பங்கிலாப வருமானம் கிடைக்குமெனின், கம்பனி ஒரு பங்கிற்காக ஆண்டுதோறும் செலுத்தும் பங்கிலாபப் பணம் யாது?

2020 (O/L) 03

ELC - 10 வரையறுக்கப்பட்ட கம்பனி (I B) தரம்-10 அலகு-03

10. பங்குச் சந்தையில் முதலீடு செய்யும் திரு சங்கரர் ஒரு பங்கின் சந்தை விலை ரூ. 80 ஆகவுள்ள ஒரு கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூ. 40 000 ஐ முதலீடு செய்கிறார். அக்கம்பனி ஒரு பங்குக்கு ரூ. 6 வீதம் ஆண்டுப் பங்கிலாபத்தைக் கொடுக்கிறது.

i) திரு. சங்கர் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

ii) திரு. சங்கர் பெறும் ஆண்டுப் பங்கிலாப வருமானத்தைக் காண்க.

ஓர் ஆண்டுக்குப் பின்னர் திரு. சங்கர் எல்லாப் பங்குகளையும் விற்று ரூ. 3 500 மூலதன இலாபத்தைப் பெறுகின்றார்

iii) ஒரு பங்கின் விற்பனை விலையைக் காண்க.

திரு. சங்கர் தன்னிடமுள்ள பங்கிலாப வருமானத்துடனும் மூலதன இலாபத்துடனும் ரூ. 3 500 ஐச் சேர்த்து அம் முழுப் பணத்தையும் 10% ஆண்டுக் கூட்டு வட்டி வீதத்தைத் தரும் ஒரு நிலையான வைப்புக் கணக்கில் இரு ஆண்டுகளுக்கு வைப்புச் செய்கின்றார்.

iv) இரு ஆண்டுகளின் இறுதியில் கணக்கில் உள்ள மொத்தப் பணத்தைக் காண்க.

2016 (O/L) 01

11. வருணிடம் கம்பனி A இன் 100 பங்குகள் இருந்தன. நிதியாண்டின் தொடக்கத்தில் அவர் அப்பங்குகளில் 40 ஐ ஒரு பங்கு ரூ. 210 வீதம் விற்றார்.

i) கம்பனி A இன் 40 பங்குகளை விற்றதன் மூலம் வருண் பெற்ற பணத்தைக் காண்க.

கம்பனி A இன் 40 பங்குகளை விற்றதன் மூலம் பெற்ற மொத்தப் பணத்தைப் பயன்படுத்தி அந்நிதியாண்டின் தொடக்கத்திலேயே வருண் ஒரு பங்கு ரூ. 240 வீதம் கம்பனி B இன் பங்குகளின் ஒரு குறித்த எண்ணிக்கையை வாங்கினார்.

ii) வருண் கம்பனி B இலிருந்து வாங்கிய பங்குகளின் எண்ணிக்கையை காண்க.

நிதியாண்டின் இறுதியில் பங்கிலாபமாகக் கம்பனி A ஒரு பங்கிற்கு ரூ. 15 வீதம் செலுத்திய அதே வேளை கம்பனி B ஒரு பங்கிற்கு ரூ. 18 வீதம் செலுத்தியது.

iii) A, B ஆகிய கம்பனியிலிருந்து அவருக்குக் கிடைத்த மொத்த பங்கிலாப வருமானத்தைக் காண்க.

iv) அவர் கம்பனி A இன் எல்லாப் பங்குகளையும் தன்னிடம் வைத்துக் கொள்ளாமல் அக்கம்பனியின் 40 பங்குகளை விற்றுக் கம்பனி B இன் பங்குகளை வாங்கியமையால் நிதியாண்டின் இறுதியில் அவருக்குக் கிடைத்த மேலதிக பங்கிலாப வருமானத்தைக் காண்க.

2017 (O/L) 03

12.

சுந்தரக் கம்பனி
ஒரு பங்கின் விலை ரூ. 50 ஆகும். ஆண்டுதோறும் ஒரு பங்கிற்கு ரூ. 2.50 வீதம் பங்கிலாபம் கொடுக்கப்படுகின்றது.

அருணா ரூ. 60 000 ஐ மேற்குறித்த கம்பனியின் பங்குகளை வாங்குவதற்கு முதலீடு செய்தார்.

i) அவர் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?

ii) ஓர் ஆண்டின் இறுதியில் கம்பனியிடமிருந்து பங்கிலாபங்களைப் பெற்ற பின்னர் அருணா ஒரு பங்கு ரூ. 55 வீதம் எல்லாப் பங்குகளையும் விற்பதன் மூலமும் அவருக்குக் கிடைக்கும் மொத்தப் பணம் யாது?

iii) அருணா தனக்கு கிடைக்கும் மொத்தப் பணத்தை ஓர் ஆண்டிற்கு ஒரு வங்கியில் வைப்புச் செய்கின்றார். அவருக்கு அவ்வாண்டிற்காக வங்கியிலிருந்து ரூ. 3450 வட்டியாகக் கிடைக்குமெனின், வங்கி கொடுக்கும் ஆண்டு வட்டி வீதம் யாது?

2021 (O/L) 03

G.C.E (O/L)

அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்களின் அடிப்படையில் இடம்பெற்ற கடந்த கால வினாக்களின் தொகுப்பு





PIRASANNA MATHS ACADEMY

2 அளவீடுகள்



கணிதம்

2016-2021



Math it Easy With PIRASANNA



தேடலும் தருகையும்:

N.PIRASANNA

NDT(Merit), B.Ed(Hons)

Teacher –Leading National School in Colombo

2 அளவீடுகள்

வினாத்தாள் 1		மொத்த புள்ளி
பகுதி A	பகுதி B	
4	1	18

ELC - 11	சுற்றளவு (I A)	தரம்-10	அலகு-01
ELC - 12	பரப்பளவு (I A)	தரம்-10	அலகு-06
ELC - 13	மேற்பரப்பின் பரப்பளவு உருளை (I A)	தரம்-10	அலகு-29
ELC - 14	மேற்பரப்பின் பரப்பளவு செவ்வரியம் (I A)	தரம்-10	அலகு-29
ELC - 15	கனவளவு உருளை (I A)	தரம்-10	அலகு-29
ELC - 16	கனவளவு செவ்வரியம் (I A)	தரம்-10	அலகு-29
ELC - 17	தூரமும் நேரமும் (I A)	தரம்-10	அலகு-22
ELC - 18	கனவளவும் நேரமும் (I A)	தரம்-10	அலகு-22
ELC - 19	ஏற்ற, இறக்க கோணங்கள் (I A)	தரம்-10	அலகு-32
ELC - 20	திரிகோண கணித விகிதங்கள் (I A)	தரம்-11	அலகு-18



www.ikedu.lk


2 அளவீடுகள்

அத்தியாவசியக் கற்றல் எண்ணக்கருக்கள்
Essential Learning Concepts

PIRASANNA MATHS ACADEMY


ELC - 11 சுற்றளவு (I A) தரம்-10 அலகு-01


01. உருவில் $ABCD$ ஒரு சதுரமாகும் BCE ஓர் ஆரைச்சிறையாகும். கூட்டுருவின் சுற்றளவைக் காண்க.



2018 (O/L) 04

02. உரு (a) இலும் உரு (b) இலும் காட்டப்பட்டுள்ள வட்டங்களினுடைய ஆரைச்சிறையின் வில்லின் நீளங்கள் சமமாகும். R இன் பெறுமானத்தைக் காண்க.






2021 (O/L) 04

03. $7\ cm$ ஆரையுள்ள ஒரு வட்டத்தின் ஓர் ஆரைச்சிறையின் வில்லின் நீளம் $11cm$ ஆகும். அவ்வாரைச் சிறை வட்டத்தின் என்ன பின்னமாகும்?

2021 (O/L) 04

ELC - 12 பரப்பளவு (I A) தரம்-10 அலகு-06

04. இங்கு $7cm$ ஆரையுள்ள ஓர் அரைவட்டத்தையும் ஒரு முக்கோணியையும் கொண்ட ஒரு கூட்டுருவம் காட்டப்பட்டுள்ளது. முழு உருவத்தினதும் பரப்பளவை காண்க.



2018 (O/L) 16

ELC - 13 மேற்பரப்பின் பரப்பளவு உருளை (I A) தரம்-10 அலகு-29

05. ஒரு திண்ம உருளையின் ஆரை $7cm$ உம் உயரம் $2cm$ உம் ஆகும். π இன் பெறுமானம் $\frac{22}{7}$ எனக் கொண்டு அதன் வளைபரப்பின் பரப்பளவைக் காண்க. (ஆரை r ஐயும் உயரம் h ஐயும் உடைய ஒரு திண்ம உருளையின் வளைபரப்பின் பரப்பளவு $2\pi rh$ ஆகும்).

2016 (O/L) 13

06. $880cm^2$ பரப்பளவுள்ள ஒரு செவ்வகத் தாள் அடியின் ஆரை $14cm$ ஆகவுள்ள ஒரு திண்மச் செவ்வட்ட உருளையின் வளைபரப்பைச் செப்பமாக மூடுமாறு ஒட்டப்பட்டுள்ளது.உருளையின் உயரத்தை காண்க.

2018 (O/L) 08

07. ஒரு திண்ம செவ்வட்ட உருளையின் அடியின் ஆரை $7\ cm$ ஆகும். அதன் உயரம் $10\ cm$ ஆகும் உருளையின் வளைபரப்பின் பரப்பளவைக் காண்க. (π இன் பெறுமானம் $\frac{22}{7}$ ஐப் பயன்படுத்துக.)


2019 (O/L) 08


08. $7cm$ ஆரையும் $5cm$ உயரமும் உள்ள ஒரு திண்மச் செவ்வட்ட உருளையின் வளைபரப்பை முற்றாக மூடுவதற்குப் பயன்படுத்தக்க ஒரு தாளின் குறைந்தபட்ச பரப்பளவைக் காண்க. (π இன் பெறுமானம் $\frac{22}{7}$ ஐப் பயன்படுத்துக.)

2021 (O/L) 12

ELC - 14 மேற்பரப்பின் பரப்பளவு செவ்வரியம் (I A) தரம்-10 அலகு-29

09. செங்கோண முக்கோணிக் குறுக்குவெட்டு உள்ள ஒரு செவ்வரியம் உரு (A) இல் காட்டப்பட்டுள்ளது. இவ்வரியத்தின் ஒரு முகத்தின் வடிவமாக அமையாத உருவத்தை தெரிந்தெடுத்து அதன் கீழ் கோடிடுக.





(i)



(ii)



(iii)

2020 (O/L) 17

10. பொருத்தமான எண்களைப் பயன்படுத்திப் பின்வரும் சுற்றில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

ஒரு சீரான முக்கோணிக் குறுக்குவெட்டு உள்ள ஒரு செவ்வரியத்தில் ..... முக்கோண முகங்களும் ..... செவ்வக முகங்களும் உள்ளன.

2021 (O/L) 07


ELC - 15 கனவளவு உருளை (I A) தரம்-10 அலகு-29

11. $7cm$ உம் உயரமுள்ள ஒரு செவ்வட்ட உருளையின் கனவளவு $88m^3$ எனின், உருளையின் அடியின் ஆரையை மீற்றரில் காண்க. (அடியின் ஆரை r ஐயும் உயரம் h ஐயும் உடைய ஒரு செவ்வட்ட உருளையின் கனவளவு $\pi r^2 h$ இனால் தரப்படுகிறது π இன் பெறுமானம் $\frac{22}{7}$ எனக் கொள்க.)

2017 (O/L) 22

ELC - 16 கனவளவு செவ்வரியம் (I A) தரம்-10 அலகு-29

12. உருவில் காணப்படும் முக்கோண அரியத்தின் கனவளவைத் தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி காண்க.



2017 (O/L) 03

ELC - 17 தூரமும் நேரமும் (I A) தரம்-10 அலகு-22


13. சீரான கதியில் செல்லும் ஒரு பேருந்து 3 செக்கனில் $48m$ தூரம் செல்கின்றது பேருந்தின் கதியை மீற்றர்/செக்கனிற் காண்க.

2016 (O/L) 03

14. ஒரு வாகனம் 30 கிலோமீற்றர்/மணித்தியாலம் என்னும் சீரான கதியில் செல்கிறது. இவ்வாகனம் 120 கிலோமிற்றர் தூரம் செல்வதற்கு எடுக்கும் நேரத்தை மணித்தியாலத்தில் காண்க.

2017 (O/L) 02

15. ஒரு மோட்டார் காரின் இயக்கத்தை வகைகுறிக்கும் ஒரு தூர-நேர வரைபு உருவிற் காட்டப்பட்டள்ளது. மோட்டார் கார் கூடுதலாக கதியிற் செல்வதை வரைபின் எப்பகுதி வகைகுறிக்கின்றது? அக்கதி யாது?



2019 (O/L) 24

16. சீரான கதியில் செல்லும் ஒரு பொருளின் இயக்கம் பற்றிய தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

தூரம் (மீற்றர்)	0	4	8	12	16
நேரம் (செக்கன்)	0	2	4	6	8

i) பொருளின் கதியை மீற்றர் / செக்கனில் காண்க?

ii) பொருள் அதே கதியில் 22 மீற்றர் செல்வதற்கு எடுக்கும் நேரத்தை காண்க?

2020 (O/L) 07

17. அனில் தனது வீட்டிலிருந்து $2.4km$ தூரத்தில் உள்ள பாடசாலைக்குச் சீரான கதியில் நடந்து செல்வதற்கு 32 நிமிடம் எடுக்கின்றான். அவன் அச்சீரான கதியில் $3km$ தூரம் நடந்து செல்வதற்கு எவ்வளவு நிமிடம் எடுப்பான்?

2021 (O/L) 18

ELC - 18 கனவளவும் நேரமும் (I A) தரம்-10 அலகு-22

18. ஒரு சீரான வீதத்தில் நீர் பாய்ந்துவரும் ஒரு குழாயிலிருந்து 480 l கொள்ளளவுள்ள ஒரு தொட்டியில் நீர் முற்றாக நிரம்புவதற்கு 8 நிமிடம் எடுக்கின்றது. குழாயில் நீர்பாய்ந்து வரும் வீதத்தை காண்க.


2018 (O/L) 11

19. 60 லிற்றர்/நிமிடம் என்னும் வீதத்தில் நீர் பாய்ந்து வரும் உருகுழாயைப் பயன்படுத்தி 420 லீற்றர் கொள்ளளவு உள்ள ஒரு தொட்டியில் நீரை நிரப்புவதற்கு எடுக்கும் நேரத்தைக் காண்க.

2019 (O/L) 05


ELC - 19 ஏற்ற, இறக்க கோணங்கள் (I A) தரம்-10 அலகு-32

20. உருவில் AB இன் மூலம் ஒரு கலங்கரைவிளக்கமும் P, Q ஆகியவற்றின் மூலம் இரு சிறிய படகுகளும் காட்டப்பட்டுள்ளன. படகு P இல் இருக்கும் ஒருவர் கலங்கரைவிளக்கத்தின் உச்சி B ஐ $30°$ ஏற்றக் கோணத்தில் நோக்குகிறார். B இல் இருக்கும் ஒருவர் படகு Q ஐ $20°$ இறக்கக் கோணத்தில் நோக்குகின்றார். தரப்பட்டுள்ள உருவில் இத்தகவல்களை வகைகுறிக்க.
(நோக்குநர்களின் உயரங்களை புறக்கணிக்க.)




2017 (O/L) 18

21. ஒரு சமதளத் தரையில் இருக்கும் AB, CD என்னும் இரு நிலைக்குத்துக் கம்பங்கள் உருவிற் காட்டப்பட்டுள்ளன. D யிலிருந்து அவதானிக்கும் போது B இன் ஏற்றக்கோணம் $42°$ உம் A இன் இறக்கக் கோணம் $58°$ உம் ஆகும். இத்தகவல்களை உருவில் வகைகுறிக்க



2019 (O/L) 19


22. ஒரு சமதளத் தரையில் உள்ள ஒரு நிலைக்குத்துக் கம்பம் AB ஆக இருக்கும் அதே வேளை P, Q ஆகியன உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு சமதளத் தரை மீது இருக்கும் இரு புள்ளிகளாகும். Q இலிருந்து பார்க்கும் போது கம்பம் AB இன் உச்சி B ஆனது $70°$ ஏற்றக் கோணத்தில் தெரிகிறது. B இலிருந்து பார்க்கும் போது புள்ளி P ஆனது $50°$ இறக்க கோணத்தில் தெரிகின்றது. இத்தகவல்களை உருவில் வகைகுறிக்க.



2020 (O/L) 14


ELC - 20 திரிகோண கணித விகிதங்கள் (I A) தரம்-11 அலகு-18

23. $cosx^\circ = 0.8$ எனத் தரப்படும் போது உருவில் உள்ள தகவல்களைக் கொண்டு PQ இன் நீளத்தைக் காண்க.



2016 (O/L) 15


24. உருவில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு $cos\ \theta$ ஐக் காண்க?



2017 (O/L) 09

ELC – 11&12 சுற்றளவு,பரப்பளவு (I B) தரம்-10 அலகு-1,6

01. ஓர் அரங்கத்தின் தரையின் பரும்படிப் படம் உருவில் காணப்படுகின்றது. மேடை அமைந்துள்ள அரைவட்டப் பகுதி CED ஐயும் கேட்போர்கூடம் அமைந்துள்ள செவ்வகப் பகுதி $ABCD$ ஐயும் அது கொண்டுள்ளது. DC இன் நீளம் $14m$ ஆகும்.
பின்வரும் கணிப்புகளுக்குத் தேவையானபோது π இன் பெறுமானம் $\frac{22}{7}$ எனக் கொள்க.



(i) அரைவட்டம் CED இன் வில்லின் நீளத்தைக் காண்க

(ii) மேடையின் நிலத்தின் பரப்பளவைக் காண்க

(iii) கேட்போர்கூடத்தின் நிலத்தின் பரப்பளவு மேடையின் நிலத்தின் பரப்பளவின் மும்மடங்கெனின், AD இன் நீளத்தைக் காண்க?

(iv) மேடையின் நிலத்தைச் சுற்றி மின்கமிழ்கள் பொருத்தப்பட்டிருக்கும் அதே வேளை C இலும் D இலும் இரு கமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன. கோடு CD மீது அடுத்துள்ள கமிழ்களுக்கிடையே $1.4\ m$ சம இடைத்தூரம் உள்ளது. வில் CED இன் மீது உள்ள கமிழ்களும் சம இடைத்தூரத்தில் பொருத்தப்பட்டுள்ளன. கோடு CD மீதும் வில் CED மீதும் உள்ள கமிழ்களின் எண்ணிக்கைகள் சமம். வில் CED இன் மீது இரு அடுத்துள்ள கமிழ்களுக்கிடையே வில்லின் வழியே உள்ள தூரத்தைக் கணிக்க.

2016 (O/L) 05

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

02. தரப்பட்டுள்ள உருவில் ஒரு செவ்வகப் பகுதி $ABDE$ ஐயும் மையக் கோணம் $45°$ ஆகவுள்ள ஒரு வட்டத்தின் ஓர் ஆரைச்சிறைப் பகுதி BCD ஐயும் கொண்ட ஒரு தோட்டத்தின் ஒரு பரும்படிப் படம் காட்டப்பட்டுள்ளது. இங்கு $BD = 14m$.
பின்வரும் கணிப்புகளுக்குத் தேவையானபோது π இன் பெறுமானம் $\frac{22}{7}$ எனக் கொள்க.

(i) பகுதி BCD இன் பரப்பளவைக் காண்க



பகுதி $ABDE$ இன் பரப்பளவு பகுதி BCD இன் பரப்பளவின் நான்கு மடங்காகும்.

(ii) AB இன் நீளத்தைக் காண்க.


(iii) வில் DC இன் நீளத்தைக் காண்க?

(iv) தோட்டத்தின் சுற்றளவைக் காண்க?

2017 (O/L) 02

03. ஒரு தகடு உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு சரிவகம் $ABCD$ இன் வடிவமுள்ள ஒரு பகுதியையும் விட்டம் DC ஐ உடைய ஓர் அரைவட்டப் பகுதியையும் கொண்டுள்ளது. (π இன் பெறுமானம் $\frac{22}{7}$ எனக் கொள்க.)

(i) அரைவட்டப் பகுதியின் விளிம்பு வழியே D இலிருந்து ஆரம்பித்து C இல் முடிவடையுமாறும் ஒவ்வோர் அடுத்துள்ள இரு பொத்தான்களுக்குமிடையே உள்ள தூரம் $2cm$ ஆக இருக்குமாறும் சிறிய பொத்தான்களைப் பொருத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான பொத்தான்களின் எண்ணிக்கை யாது?




(ii) தகட்டின் மொத்த பரப்பளவைக் கணிக்க.

(iii) அரைவட்டப் பகுதியின் பரப்பளவுக்குச் சமமான பரப்பளவும் AD இன் நீளத்திற்குச் சமமான நீளமும் உள்ள ஒரு செவ்வகத் தகடு செய்யப்படுமெனின், அதன் அகலத்தை கணிக்க.

2019 (O/L) 02

04. உருவில் ஒரு செவ்வகப் பகுதி $ABCD$ ஐயும் $14m$ ஆரையுள்ள ஓர் அரைவட்டப் பகுதியையும் கொண்டுள்ள ஒரு பூப்பாத்தி காட்டப்பட்டுள்ளது. பூப்பாத்திக்கு வெளியே நிழற்றப்பட்டுள்ள செவ்வகப் பகுதிகள் இரண்டிலும் கற்கள் பரப்பப்பட்டுள்ளன. (π இன் பெறுமானம் $\frac{22}{7}$ எனக் கொள்க.)



(i) பூப்பாத்தியின் செவ்வகப் பகுதியின் நீளம் BC ஐக் காண்க.


(ii) பூப்பாத்தியின் அரைவட்டப் பகுதியின் பரப்பளவைக் காண்க.

(iii) அரைவட்டப் பகுதியின் பரப்பளவானது கற்கள் பரப்பப்பட்டுள்ள இரு பகுதிகளினதும் பரப்பளவுகளின் கூட்டுத்தொகைக்குச் சமமெனின், செவ்வகப் பகுதியின் நீளம் AB ஐக் காண்க.

(iv) முழுப் பூப்பாத்தியினதும் சுற்றளவைக் கண்டு அச்சுற்றளவுக்குச் சமமான சுற்றளவையும் அரைவட்டத்தின் விட்டத்திற்குச் சமமான அகலத்தையும் கொண்ட ஒரு செவ்வகத்தின் நீளத்தைக் காண்க?

2020 (O/L) 01

05. உருவில் ஒரு செங்கோண முக்கோண நிலப் பகுதி ABC ஐயும் BC ஐ விட்டமாகக் கொண்ட ஓர் அரைவட்ட நிலப் பகுதியையும் கொண்ட ஒரு பூப்பாத்தி காட்டப்பட்டுள்ளது. (π இன் பெறுமானம் $\frac{22}{7}$ எனக் கொள்க.)



(i) AC இன் நீளத்தைக் காண்க.
சாடை: $28 = 4 \times 7, 21 = 3 \times 7$)


(ii) முழுப் பூப்பாத்தியையும் சுற்றி ஒரு வேலியை அமைக்க வேண்டியுள்ளது. அவ்வேலியின் நீளத்தைக் காண்க.

(iii) அரைவட்டப் பகுதியின் பரப்பளவைக் காண்க.

(iv) அரைவட்டப் பகுதியின் பரப்பளவிற்குச் சமமான பரப்பளவுள்ள ஒரு செவ்வகப் பகுதியை AB ஒரு பக்கமாக இருக்குமாறு முக்கோணிக்கு வெளியே சேர்க்க வேண்டியுள்ளது. அச்செவ்வகத்தின் ஒரு பரும்படிப் படத்தை அதன் அளவீடுகளுடன் மேற்குறித்த உருவில் வரைக.

2021 (O/L) 01

06. ஒரு மாணவன் தனது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்ற விதம் தரப்பட்டுள்ள தூர – நேர வரைபில் காட்டப்பட்டுள்ளது.



(i) மாணவன் இடையில் தங்கியிருந்த நேரம் யாது?

(ii) அவன் முதல் 30 நிமிடத்திற்கு சென்ற கதியைக் கிலோமீற்றர்/மணித்தியாலத்திற் காண்க?

(iii) அவன் பயணத்தில் இறுதி 20 நிமிடத்திற் சென்ற கதி முதல் 30 நிமிடத்திற் சென்ற கதியின் எத்தனை மடங்காகும்?

(iv) அவன் முதல் 30 நிமிடத்திற் சென்ற கதியில் முழுத் தூரத்திற்கும் தங்கியிராமற் சென்றிருந்தால், அதற்குரிய வரைபை இவ்வுரு மீதே வரைக.
அப்போது அவன் எத்தனை நிமிடத்திற்கு முன்பாகப் பயணத்தை முடித்திருக்கலாம்?

2018 (O/L) 01



G.C.E (O/L)

அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்களின் அடிப்படையில் இடம்பெற்ற கடந்த கால வினாக்களின் தொகுப்பு





PIRASANNA MATHS ACADEMY

3 அட்சரகணிதம்



கணிதம்

2016-2021





Math it Easy With PIRASANNA

தேடலும் தருகையும்:

N.PIRASANNA

NDT(Merit), B.Ed(Hons)


Teacher –Leading National School in Colombo

www.

3 அட்சரகணிதம்

வினாத்தாள் 1 பகுதி A	மொத்த புள்ளி
6	12

ELC - 21	காரணி காணல்	தரம்-10	அலகு-15
ELC - 22	அட்சரகணிதக் கோவைகளின் பொது மடங்குகளில் சிறியது	தரம்-10	அலகு-12
ELC - 23	அட்சரகணித பின்னம் கூட்டல்,கழித்தல்	தரம்-10	அலகு-13
ELC - 24	அட்சரகணித பின்ன சமன்பாடு தீர்த்தல்	தரம்-10	அலகு-15
ELC - 25	ஒருங்கமை சமன்பாடுகள் தீர்த்தல்	தரம்-10	அலகு-05
ELC - 26	இருபடிச்சமன்பாடுகள் தீர்த்தல்	தரம்-10	அலகு-05
ELC - 27	படித்திறன் , வெட்டுத்துண்டு காணல்	தரம்-10	அலகு-21
ELC - 28	அட்சரகணித பின்னம் பெருக்கல்,பிரித்தல்	தரம்-11	அலகு-07
ELC - 29	சமனிலிகள்	தரம்-10	அலகு-25
ELC - 30	தாயங்கள்	தரம்-11	அலகு-19



3 அட்சரகணிதம்

அத்தியாவசியக் கற்றல் எண்ணக்கருக்கள்
Essential Learning Concepts
PIRASANNA MATHS ACADEMY

ELC - 21 காரணி காணல் தரம்-10 அலகு-15

01. காரணிகளைக் காண்க $x^2 - 36$

2017 (O/L) 11

02. காரணிகளைக் காண்க. $2x^2 + x - 6$

2018 (O/L) 02

03. காரணிகளைக் காண்க. $x^2 + 3x - 10$

2019 (O/L) 02

04. கோவை $2x^2 + 3x + 1$ இன் ஒரு காரணி $(x + 1)$ ஆகும். மற்றைய காரணியைக் காண்க.

2020 (O/L) 13

05. காரணிகளைக் காண்க: $9x^2 - 4$

2021 (O/L) 03

ELC - 22 அட்சரகணிதக் கோவைகளின் பொது மடங்குகளில் சிறியது தரம்-10 அலகு-12

06. xy, x^2 என்னும் இரு அட்சரகணிதக் கோவைகளின் பொது மடங்குகளுட் சிறியதைக் காண்க.

2016 (O/L) 08

07. $2xy, 4y^2$ என்னும் இரு அட்சரகணிதக் கோவைகளின் பொது மடங்குகளுட் சிறியதைக் காண்க.

2017 (O/L) 07

08. பின்வரும் மூன்று அட்சரகணித உறுப்புகளிலும் பொது மடங்குகளுட் சிறியதைக் காண்க. $3x^2, 6xy, 2y$

2019 (O/L) 17

09. பின்வரும் கோவைகளின் பொது மடங்குகளுட் சிறியதைக் காண்க. $3x, 2xy, 4y^2$

2020 (O/L) 06

10. பொது மடங்குகளுட் சிறியதைக் காண்க. $4x^2y, 6xy, 3y^2$

2021 (O/L) 09

ELC - 23 அட்சரகணித பின்னம் கூட்டல்,கழித்தல் தரம்-10 அலகு-13

11. சுருக்குக. $\frac{1}{x}+\frac{1}{2x}$

2016 (O/L) 07

12. சுருக்குக. $\frac{1}{2x}-\frac{1}{4x}$

2017 (O/L) 04

13. சுருக்குக. $\frac{4}{x}-\frac{1}{2x}$

2018 (O/L) 05

ELC - 24 அட்சரகணித பின்ன சமன்பாடு தீர்த்தல் தரம்-10 அலகு-15

14. தீர்க்க: $\frac{1}{x}-\frac{1}{3x}=\frac{2}{3}$

2020 (O/L) 03

15. தீர்க்க: $\frac{1}{x}-\frac{3}{4x}=\frac{3}{8}$

2021 (O/L) 14

ELC - 26 இருபடிச்சமன்பாடுகள் தீர்த்தல் தரம்-10 அலகு-05

16. தீர்க்க $(x-1)(x-2)=0$

2016 (O/L) 14

17. தீர்க்க: $(x+2)(x-1)=0$

2017 (O/L) 14

18. தீர்க்க $x^2-36=0$


2018 (O/L) 10

19. தீர்க்க : $2x^2-8=0$

2019 (O/L) 11


ELC - 27 படித்திறன் , வெட்டுத்துண்டு காணல் தரம்-10 அலகு-21

20. உருவில் உள்ள நேர்கோட்டின் சமன்பாட்டை வடிவம் $y=mx+c$ இல் எடுத்துரைக்கும் போது m, c ஆகியவற்றின் பெறுமானங்களை எழுதுக.



2016 (O/L) 21

21. உருவில் A, B ஆகிய புள்ளிகளினூடாகச் செல்லும் நேர்கோட்டின் படித்திறனைக் காண்க.




2017 (O/L) 25

22. $(0,8), (2,4)$ எனும் புள்ளிகளினூடா செல்லும் நேர் கோட்டின் படித்திறனைக் காண்க?

2018 (O/L) 22

23. உருவில் AB இனால் வகைகுறிக்கப்படும் நேர்கோட்டின் படித்திறனைக் காண்க.



2019 (O/L) 08


24. $(0,2),(5,2)$ எனும் புள்ளிகளினூடா செல்லும் நேர் கோட்டின்

$i)$ படித்திறனைக் காண்க?

$ii)$ வெட்டுத்துண்டு ஆகியவற்றைக் காண்க

2020 (O/L) 20

25. உருவில் உள்ள நேர்கோடு AB இன் சமன்பாட்டைப் பெறுக.



2021 (O/L) 20

ELC - 28 அட்சரகணித பின்னம் பெருக்கல்,பிரித்தல் தரம்-11 அலகு-07

26. சுருக்குக. $\frac{3a}{10b} \div \frac{9}{5b}$

2018 (O/L) 24

27. சுருக்குக $\frac{ax}{2} \div \frac{3a}{4x}$

2019 (O/L) 09

28. சுருக்குக. $\frac{3x}{y} \times \frac{5y^2}{6x}$

2020 (O/L) 11

29. சுருக்குக. $6x^4y^2 \div 3x^2y$

2021 (O/L) 06

ELC - 29 சமனிலிகள் தரம்-10 அலகு-25

30. சமனிலி $2x + 15 \leq 5$ ஐத் திருப்தியாக்கும் எல்லா நேர் நிறையெண்களையும் எழுதுக.

2016 (O/L) 02

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

ELC - 30 தாயங்கள் தரம்-11 அலகு-19

31. $A = \begin{pmatrix} 1 & 2 \\ 0 & 1 \end{pmatrix}, B = \begin{pmatrix} 2 & 2 \\ 0 & 4 \end{pmatrix}$ எனத் தரப்பட்டிருக்கும் போது, தாயம் AB ஐக் காண்க.

2016 (O/L) 02

32. A, B என்னும் தாயங்கள் $A = \begin{pmatrix} -2 \\ 2 \end{pmatrix}, B = \begin{pmatrix} -1 & 2 \end{pmatrix}$ ஆகியவற்றினால் தரப்பட்டுள்ளன. தாயம் AB ஐக் காண்க.

2017 (O/L) 19

33. $\begin{pmatrix} 2 & -1 \\ 0 & 3 \end{pmatrix}\begin{pmatrix} 1 & 3 \\ -2 & 1 \end{pmatrix} = \begin{pmatrix} x & y \\ -6 & 3 \end{pmatrix}$ எனின், x இனதும் y இனதும் பெறுமானத்தைக் காண்க.

2018 (O/L) 18

34. $\begin{pmatrix} 2 & 1 \\ -1 & 2 \end{pmatrix}\begin{pmatrix} 2 & -1 \\ -1 & 1 \end{pmatrix} = \begin{pmatrix} 5 & x \\ -4 & 3 \end{pmatrix}$ எனின், x இன் பெறுமானத்தைக் காண்க.

2019 (O/L) 22

35. $\begin{pmatrix} 1 & -1 \\ 0 & 2 \\ -1 & 1 \end{pmatrix} + \begin{pmatrix} 3 & 4 \\ 1 & -1 \\ 0 & y \end{pmatrix} = \begin{pmatrix} 4 & 3 \\ 1 & x \\ -1 & x \end{pmatrix}$ எனின் x இன் பெறுமானத்தைக் கண்டு y இன் பெறுமானத்தைக் காண்க.

2020 (O/L) 24

36. $A = \begin{pmatrix} 1 & -3 \end{pmatrix}, B = \begin{pmatrix} -1 & 2 \\ -1 & 1 \end{pmatrix}$ ஆகும். தாயம் AB ஐக் காண்க.

2021 (O/L) 23

G.C.E (O/L)

அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்களின் அடிப்படையில் இடம்பெற்ற கடந்த கால வினாக்களின் தொகுப்பு





PIRASANNA MATHS ACADEMY

4 கேத்திர கணிதம்



கணிதம்

2016-2021



Math it Easy With PIRASANNA



தேடலும் தருகையும்:

N.PIRASANNA


NDT(Merit), B.Ed(Hons)

Teacher –Leading National School in Colombo

4 கேத்திர கணிதம்

வினாத்தாள் 1 பகுதி A	மொத்த புள்ளி
8	16

ELC - 31	முக்கோணி ஒன்றின் மூன்று அகக் கோணங்களின் கூட்டுத்தொகை 180°	தரம்-10	அலகு-08
ELC - 32	முக்கோணி ஒன்றின் பக்கத்தை நீட்ட உண்டாகும் புறக்கோ. அ.எ.கோண.கூட்டு தொகைக்கு சமன்	தரம்-10	அலகு-08
ELC - 33	ஒருங்கிசைவு	தரம்-10	அலகு-05
ELC - 34	இருசமபக்க முக்கோணிகள்	தரம்-10	அலகு-16
ELC - 35	இணைகரத்தின் பண்புகள்	தரம்-10	அலகு-16
ELC - 36	வட்டத்தின் வில்லானது மையத்தில் எதிரமைக்கும் கோணம் அவ்வில் விட்டத்தின் எஞ்சிய பகுதியில் எதிரமைக்கும் கோணத்தின் இரு மடங்காகும்.	தரம்-10	அலகு-31
ELC - 37	வட்டத்தின் நாணின் நடுப்புள்ளியை மையத்துடன் இணைக்கும் நேர் கோடு அந்நாணுக்குச் செங்குத்தாகும்	தரம்-10	அலகு-27
ELC - 38	வட்டத்தின் ஒரே துண்டக் கோணங்கள் சமன்	தரம்-10	அலகு-31
ELC - 39	அரைவட்டக் கோணம் செங்கோணம்	தரம்-10	அலகு-31
ELC - 40	நான்கு அடிப்படை ஒழுக்குகள்	தரம்-10	அலகு-28
ELC - 41	பைதகரஸ் தேற்றம்	தரம்-11	அலகு-17
ELC - 42	நடுப்புள்ளித் தேற்றம்	தரம்-11	அலகு-11
ELC - 43	வட்ட நாற்பக்கல்	தரம்-11	அலகு-21






4 கேத்திர கணிதம்

அத்தியாவசியக் கற்றல் எண்ணக்கருக்கள்
Essential Learning Concepts

PIRASANNA MATHS ACADEMY


ELC - 31 முக்கோணி ஒன்றின் மூன்று அகக் கோணங்களின் கூட்டுத்தொகை 180° — தரம்-10 அலகு-08

01. உருவில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப x இன் பெறுமானத்தைக் காண்க.



2018 (O/L) 03


02. உருவில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப x இன் பெறுமானத்தைக் காண்க.



2019 (O/L) 03


ELC - 32 முக்கோணி ஒன்றின் பக்கத்தை நீட்ட உண்டாகும் புறக்கோ. அ.எ.கோண.கூட்டு தொகைக்கு சமன் — தரம்-10 அலகு-08

03. உருவில் உள்ள தகவல்களைக் கொண்டு $D\hat{B}C$ இன் பருமனைக் காண்க.



2017 (O/L) 05


04. உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப $A\hat{B}C$ இன் பருமனைக் காண்க.



2021 (O/L) 05

ELC - 33 ஒருங்கிசைவு — தரம்-10 அலகு-05


05. உருவில் காணப்படும் ABC, PQR என்னும் இரு முக்கோணிகளும் ஒருங்கிசைகின்றன. தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு x, y, z ஆகியவற்றின் பெறுமானங்களைக் காண்க.



2016 (O/L) 12

06. உருவில் தரப்பட்டுள்ள முக்கோணிகளிடையே ஒருங்கிசையும் **முக்கோணச் சோடியை எழுதி,** அச்சோடியை இனங்காண்பதற்குப் பயன்படுத்திய சந்தர்ப்பத்தைக் கீழே தரப்பட்டுள்ள (1),(2),(3) ஆகிய சந்தர்ப்பங்களில் இருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ் கோடிடுக.

(1) ப.கோ.ப (2) கோ.கோ.ப (3) ப.ப.ப




2017 (O/L) 15

ELC - 34 இருசமபக்க முக்கோணிகள் தரம்-10 அலகு-16

07. உருவில் ABC ஒரு நேர்கோடாகும். தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப $D\hat{A}B$ இன் பருமனைக் காண்க.


ELC 32 & 34



2018 (O/L) 06
